



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர்பேட்டை கிழக்கு ஒன்றியம், மூலசமுத்திரம், வெள்ளையூர், அஜீஸ்நகர், பாலி, ஆசனூர், பரியந்தல், திருப்பெயர், எடைக்கல், சாத்தனூர், சீயமங்கலம் ஆகிய கிராமங்களில் உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜி.ஆர். வசந்தவேல் தனக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்த வாக்காளர் பெருமக்களுக்கு நன்றி தெரிவித்தார், இந்த நிகழ்வில் ஒன்றிய செயலாளர், நகர மன்ற துணைத் தலைவர் யு.எஸ். வைத்தியநாதன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணியினர், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் தே.மு.தி.க. உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### கள்ளக்குறிச்சி நகர போக்குவரத்து நெரிசலைக் குறைத்திட

# வெளிவட்ட சாலைப் பணிகளை விரைந்து முடிப்பீர்!

## த.வெ.க. அரசுக்கு தே.மலையரசன் எம்.பி. வலியுறுத்தல்!

கள்ளக்குறிச்சி,ஜூன் 14-

கடந்த திராவிட மாடல் நல்லாட்சியில் கழக தலைவர், சமூக நீதி காவலர், முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்த அனைத்து திட்டங்களும் அனைத்து மக்களுக்கும் பாகுபாடு இல்லாமல் சென்றடைந்தவாறு தற்போது உள்ள அரசும் அனைத்துதிட்டங்களையும் அனைத்து மக்களுக்கும் செயல்படுத்துமாறு கள்ளக்குறிச்சி எம்.பி. தே.மலையரசன் புதிய அரசுக்கு வலியுறுத்தினார்.

கள்ளக்குறிச்சி மாவட்ட துறை சார்ந்த பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் அமைச்சர் வன்னியரசு தலைமையில் நடைபெற்றது, இதில் மாவட்ட ஆட்சியர் பத்மஜா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஷானாஸ் விழுப்புரம் எம்பி ரவிக்குமார், எம்எல்ஏக்கள் அருள் விக்னேஷ், ராக்கேஷ் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட தே.மலையரசன் எம்பி கள்ளக்குறிச்சி நகர போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பதற்காக திராவிட மாடல்ஆட்சியில் கொண்டு வந்த வெளிவட்ட சாலை ( Ring Road) பணிகளை விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

விவசாய கடன்களை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்வழியிலும், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் வழியிலும் முழுமையாக ரத்து செய்யுமாறு புதிய அரசுக்கு வலியுறுத்தினார். தமிழ்நாடு மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அடிக்கடி நடக்கும் மின்வெட்டை சரி செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.



பஞ்சமி நிலங்கள் சட்ட விரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டிருந்தால், அவற்றை மாநில வருவாய்த்துறை அதிகாரிகள் மூலம் மீட்டு, மீண்டும் அதே பட்டியல் இன (Scheduled Caste) மக்களுக்கு மட்டுமே ஒப்படைக்க வேண்டும். இந்த நிலங்களை வேறு எந்த சமூகத்தினரும் விற்கவோ, வாங்கவோ சட்டப்படி உரிமை கிடையாது. ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும், அதே போல் நிலமற்ற ஏழை மக்களுக்கு மற்றும் விவசாய தொழிலாளர்களுக்கு ஏற்கனவே துரிதமாக செயல்பட்டு பட்டா வழங்கிய திராவிட மாடல் ஆட்சியின் படி நீங்களும் விரைவாக செயல்பட்டு பட்டா வழங்குமாறு கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் புதிய அரசுக்கு வலியுறுத்தினார்.

### சேதமடைந்த சாலைப் பணியை விரைந்து முடிப்பீர்!

# நெல்லை மேலப்பாளையம் பகுதியில் சிறுமி உயிரிழப்பு!

## மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. கண்டனம்!

நெல்லை, ஜூன் 14-

நெல்லை மேலப்பாளையம் பகுதியில் சேதமடைந்த சாலையால் ஏற்பட்ட விபத்தில் ஒன்றரை வயது சிறுமி உயிரிழந்த சம்பவத்தில் ஏற்கனவே கடந்த தி.மு.க. ஆட்சியில் சாலையை சீரமைக்க 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில் தற்போது வரை அதற்கான பணிகள் துவங்க வில்லை, பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பணிகளை நிறுத்தி வைத்த கோட்ட பொறியாளரும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா வும் இந்த உயிரிழப்புக்கு பொறுப்பேற்க வேண்டும் என்றும் சாலை சீரமைப்பு பணிகளை உடனடியாக தொடங்க வில்லை என்றால் தி.மு.க. சார்பில் போராட்டம் நடத்தப் படும். என நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. பொறுப் பாளரும் பாளையங் கோட்டை சட்டமன்ற உறுப்பினருமான மு.அப்துல்வகாப் தெரிவித்தார்.

நெல்லை மாவட்டம் பத்தமடையைச் சேர்ந்தவர் ஷேக்முகைதீன் என்பவர் தனது மனைவி மற்றும் ஒன்றரை வயது பெண் குழந்தை ரெஷிமாவுடன் இருசக்கர வாகனத்தில் மேலப்பாளையத்தில் உள்ள உறவினர் வீட்டிற்கு வந்த போது வாகனம் மேலப் பாளையம் கருங்குளம் அருகே சாலை சேதம் அடைந்த குண்டும் குழியுமாக இருந்ததால் விபத்து ஏற்பட்டு ஒன்றரை வயது குழந்தை விபத்தில் சிக்கி இறந்தது.இந்த சம்பவத்தை தொடர்ந்து அப் பகுதியில் அவரது உறவினர்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.இந்த சம்பவத்தால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்த நிலையில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர், பாளை சட்டமன்ற உறுப்பினருமான மு.அப்துல் வகாப் விபத்து நடந்த பகுதிக்கு சென்று பார்வையிட்டார். மேலும் விபத்திற்கான காரணங்களையும் கேட்டறிந்த போது சேதமடைந்த சாலையே என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. செய்தியாளர்களிடம் கூறியதாவது. விபத்தில்ஒன்றரைவயது குழந்தை இறந்துள்ளது மிகுந்த வருத்தம் அளிக்கிறது.இன்று குழந்தையின் பெற்றோரை பார்த்து ஆறுதல் கூறினேன்.விபத்து நடந்த பகுதியையும் பார்வையிட்டேன். இந்த விபத்திற்கு காரணம்,கடந்த தி.மு.க.ஆட்சி என்றும் பாளையங்கோட்டை எம்.எல்.ஏ காரணம் என்று சிலர் சமூக வலைதளங்களில் தவறான கருத்துக்களை பரப்பிவருகின்றனர். பாளையங்கோட்டை தொகுதியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்காக 650 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, 80 சதவீதப் பணிகள் நிறைவடைந்துள்ளன. மேலும், சாலைகளைச் சீரமைக்க 55 கோடி ரூபாயும், நெடுஞ் சாலைத் துறை சார்பில் 10 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கப் பட்டது. டெண்டர் விடப் பட்டு பணிகள் தொடங்க வேண்டிய நிலையில், அவை திடீரென நிறுத்தப் பட்டுள்ளன.

இதுகுறித்து நெடுஞ் சாலைத்துறை கோட்டப் பொறியாளரிடம் கேட்ட போது மேலிடத்தில் இருந்து பணியை நிறுத்த சொல்லி உத்தர விட்டுள்ளார்கள்என தெரிவிக்கிறார். மேலிடம் என்பது யார் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் ஆதவ்அர்ஜுனா தானே, சாலை சீரமைப்பு பணிகளுக்கு நிதி ஒதுக்கிய நிலையில் பணிகளை நிறுத்தி வைத்த கோட்டப் பொறியாளரும், அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவுமே குழந்தையின் உயிரிழப்பிற்கு பொறுப்பேற்க வேண்டும்.

சாலை சீரமைப்பு பணிகளை உடனடியாக தொடங்காவிட்டால் அடுத்த கட்டமாக தி.மு.க சார்பில் போராட்டம் நடத்தப்படும் என தெரிவித்தார்.




கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையை ஏற்று தென்காசி தெற்கு மாவட்ட அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் முன்னிலையில் 25 தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் 2026 தென்காசி சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக போட்டியிட்ட ஜி.எம். சங்கர் (எ) கோமதிசங்கர் கே.இ.ராகுல் ஆகியோர் ஏற்பாட்டில் 25 இளைஞர்கள் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.கழகத்தில் இணைந்த அவர்கள் அனைவரையும் வரவேற்று கழக இருவண்ண வேஷ்டியை மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் வழங்கினார்.நிகழ்வில் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆண்டிமடம் எஸ். சிவசுப்பிரமணியம்

### ஜூன் 14 (2019)



தந்தை பெரியாரின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, திராவிடர் கழகத்தில் உறுப்பினராகி, தந்தை பெரியார் கலந்து கொண்ட கூட்டங்களில் க அவரோடு சுற்றுப்பயணம் செய்தவர்.

1971ல் கழகத்தில் இணைந்து, ஆண்டிமடம் ஒன்றியச் செயலாளர், ஒருங்கிணைந்த திருச்சி மாவட்ட துணைச் செயலாளர், பெரம்பலூர் மாவட்டச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், வெளிமாநில தொடர்பு செயலாளர், அரியலூர் மாவட்ட அவைத்தலைவர், சட்டதிட்ட திருத்தக்குழு உறுப்பினர் என கழகத்தில், ஒன்றியம் முதல் தலைமை கழகம் வரையில் பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணி ஆற்றி வந்தவர்.

ஆண்டிமடம் ஒன்றிய பெருந்தலைவராவும், ஆண்டிமடம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். 1998ல் மாநிலங்களவை உறுப்பினராகி, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக பாராளுமன்றத்தில் குரல் கொடுத்தவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம், ஈழத்தமிழர் ஆதரவு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

இவரது கழகப் பணியினைப் சிறப்பிக்கும் வகையில், 2015ல் நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைமைக் கழகத்தின் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தனது திருக்கரங்களால் "பெரியார் விருது" வழங்கி சிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்தநாள் விழா!

## செயலாளர் டாக்டர்.அ.சுபேர்கான் பங்கேற்று உணவு வழங்கினார்!

சென்னை, ஜூன் 14-

முத்தமிழறிஞர் தமிழினத்தலைவர் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்டக் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் மாவட்ட துணை அமைப்பாளர் அனீபா அவர்களின் தலைமையில் இராயபுரம் ஷேக் மேஸ்திரி தெருவில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.



இந்நிகழ்ச்சியில் கழக சிறுபான்மை நல உரிமைப் பிரிவுச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் கலந்துகொண்டு அறுசுவை உணவு வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் முன்னாள் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் த. இளைய அருணா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ந.மனோகரன், வட்ட கழகச் செயலாளர்கள் ஆர்.வி. கணேஷ், கண்ணன், கலைச்செல்வன், சதீஷ், கண்ணன் பொதுக்குழு உறுப்பினர் சு.சந்திர சேகரன், கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு அமைப்பாளர் எம்.ஆர்.டி.அப்துல் ரகுமான், துணை அமைப்பாளர் தன்வீர் அகமது கான், இராயபுரம் கிழக்கு பகுதி அமைப்பாளர் ஐனுல் ஹக், துணை அமைப்பாளர்கள் திரு,நூறுதீன், ஷெரீப், மேற்கு பகுதி கழக அமைப்பாளர் அமீர் அசன், இளைஞரணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் சோம சுந்தரமூர்த்தி, லயோலா மதன், கிழக்கு பகுதி அமைப்பாளர் அப்துல் மாலிக், நரேஷ், சுனில்குமார், பொன்னரசு, மகளிரணி மாவட்ட அமைப்பாளர் திருமிகு.லட்சுமி வேலு, தகவல் தொழில் நுட்ப அணி இராயபுரம் தொகுதி ஒருங்கிணைப்பாளர் சொப்னா தேவி, சூர்யா, மாவட்ட மீனவரணி துணை அமைப்பாளர்கள் பிரபாகரன், டெல்லி பாபு, ரங்கராஜன், பொறியாளர் அணி துணை அமைப்பாளர் மணிகண்டன், சுற்று சூழல் அணி துணை அமைப்பாளர்கள் மகேந்திரன், சிவதனுஷ், நெசவாளர் அணி துணை அமைப்பாளர் கார்த்திக் செங்குட்டுவன் மற்றும் கழக செயல்வீரர் கௌஸ் சமதானி உள்ளிட்ட கழக உடன்பிறப்புகளும் ஏராளமான பொதுமக்களும் பங்கேற்று சிறப்பித்தனர்.

### தலைமைச் செயற்குழு உறுப்பினர்

# ஏர்போர்ட் சி.எம்.இராஜேந்திரன் தாயார் திருமதி விஜயாமணி மறைவு!

## கழகத் தலைவர் மு.க,ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன் 14-

கோவை - தி.மு.கழக தலைமை செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் சி.எம்.இராஜேந்திரனின் தாயார் திருமதி விஜயாமணி அவர்கள் 12.6.2026 காலை உடல்நலக்குறைவால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்

செய்தியறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார். அச்செய்தியில்"தி.மு.கழகதலைமை செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் சி.எம். இராஜேந்திரனின் தாயார் திருமதி விஜயாமணி அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து துயருற்றேன். அவரை இழந்து வாடும் அவர்கள் தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

### தலைமைச் செயற்குழு உறுப்பினர்

# ஏர்போர்ட் சி.எம்.இராஜேந்திரன் தாயார் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

கோவை, ஜூன் 14-



கோவை தி.மு. கழக தலைமை செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் சி.எம்.இராஜேந்திரனின் தாயார் திருமதி விஜயாமணி அவர்கள் 12.06.2026 காலை உடல்நலக்குறைவால் இயற்கை எய்தார்கள் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழக முன்னணியினர், தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த திருமதி விஜயாமணி அவர்களின் உடலுக்கு மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

### பணி நீட்டிக்க வேண்டும் என்றால் என்னுடன் நெருக்கமாக இருக்க வேண்டும்!

# மகளிர் உடற்பயிற்சி பெண் பொறுப்பாளரை தொந்தரவு செய்த த.வெ.க. செயலாளர் மீது பாலியல் வழக்கு!

## வீட்டின் கதவை நள்ளிரவு தட்டி அத்துமீறியது விசாரணையில் அம்பலம்!

சென்னை, ஜூன் 14-

சென்னை ஆலந்தூர் மாதவபுரம் பகுதியை சேர்ந்தவர் வசந்தி (பெயர் மாற்றப்பட்டுள்ளது). இவர் சென்னை மாநகராட்சியின் 160வது வட்டத்தில் அமைந்துள்ள மகளிர் உடற்பயிற்சி மையத்தின் பொறுப்பாளராக பணியாற்றி வருகிறார். இவர் கடந்த ஆட்சியின் போது நியமிக்கப்பட்டவர். தற்போது ஆட்சி மாற்றம் காரணமாக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட வசந்தியை ஆலந்தூர் வடக்கு பகுதி தவெக செயலாளர் வேம்புலி என்பவர் வசந்தியிடம் இந்த 'நீ இந்த பதவியில் நீட்டிக்க வேண்டும் என்றால், என்னுடன் நெருக்கமாக இருக்க வேண்டும்' என்று கட்டாயப்படுத்தியுள்ளார்.

அதற்கு வசந்தி மறுப்பு தெரிவித்து கடுமையாக திட்டியதாக கூறப்படுகிறது. அதேநேரம் வசந்திக்கு இந்த பணியால் மாதம் ரூ.12 ஆயிரம் வரை ஊதியம் வழங்கப்படுவதாக கூறப்படுகிறது. அடுத்த மாதத்திற்கான ஊதியத்தை வசந்திக்கு கொடுக்க கூடாது என்று தவெக செயலாளர் வேம்புலி பல வகையில் அதிகாரிகளுக்கு நெருக்கடி கொடுத்து வருகிறார்.

அதேநேரம், தினமும் மகளிர் உடற்பயிற்சி மையத்திற்கு வந்து, வசந்தியிடம் "இப்பவும் ஒன்றும் கெட்டுப்போகவில்லை. உனக்கு வேலை வேண்டும் என்றால் என்னுடன் வா... இல்லை என்றால் வேலை உனக்கு இல்லை" என கூறி மிரட்டியதாகவும் கூறப்படுகிறது.

எதற்கும் அசராத வசந்தி, தவெக செயலாளர் வேம்புலியின் ஆசைக்கு இணங்கவில்லை. இதற்கிடையே வசந்தியின் வீட்டின் கதவை நள்ளிரவு 12 மணி முதல் 2 மணி இடைவேளையில் கடந்த ஒருவாரமாக தவெக செயலாளர் வேம்புலி தட்டி உல்லாசத்திற்கு அழைத்து வந்ததாக கூறப்படுகிறது.

அதை தொடர்ந்து போலீசில் புகார் அளித்தார். பரங்கிமலை போலீசார் ஆலந்தூர் வடக்கு பகுதி தவெக செயலாளரான வேம்புலி மீது பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் செய்து வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் பெண் ஒருவரை உல்லாசத்திற்கு அழைத்து தொந்தரவு செய்த தகவலும் தவெக மேலிடத்திற்கு தெரிவிக்கப்பட்டது. அதைதொடர்ந்து வேம்புலியை தவெக மாவட்ட செயலாளரும், எம்எல்ஏவான சரவணன், நிர்வாகம் கட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டதாக செயலாளர் பொறுப்பு மற்றும் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கி உத்தரவிட்டுள்ளார்.

அதைதொடர்ந்து வேம்புலியை போலீசார் கைது செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.